# மக்கள் மறுவாழ்வு

மலர் : 5 | சித்திரை-ஏப்ரல் 1987 | விலை 75 காசுகள் | இதழ் : 7

## சிங்களக் குடியேற்றம்-இளைஞர்கள் கைது நடவடிக்கை :

# மலையக மக்கள் அச்சம்!

**இலங்கை அரசு மலையகத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள மக்களை குடியேற்றி வருகிறது; தமிழ் இளைஞர்களை அடிக்கடி கைதிசெய்து வருகிறது. இது மலையகத்தையும் வடகிழக்கு மாகாணங்களைப் போல ஆக்கி விடுமோ என்று மலையகத் தமிழ் மக்கள் அச்சமடைந்திருக்கின்றனர்.**

அண்மைக்காலத்தில் மலையகத்தில் தோட்டப்புறங்களைச் சேர்ந்து படித்த இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் போலீஸாரால் அடிக்கடி கைது செய்யப்படும் போக்கு என்றுமில்லாத வகையில் அதிகரித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இவ்விதம் கைது செய்வது, சென் கூம்ஸ் தோட்டத்தில் நடத்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தின் பின்னவரும், அல்ஜின் என்ற தோட்டத்தில் சிலஇளைஞர்களை தொழிலாளர் கைது செய்ய உதவிய சம்பவத்திற்கு பின்னருமே அதிகரித்துள்ளதாக தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டுவதாக செய்திகள் கூறுகின்றன.

'சென் கூம்ஸ்' துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து 260 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

தொழிற் சங்கங்களுக்கிடையில் இருக்கும் பிளவுகளை பயன்படுத்தி, தொழிற்சங்கங்களுக்கும், தொழிலாளருக்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் இடையில் தவறான போக்குகளை உண்டாக்கி ஏற்படும் வன்செயல்களுக்கு 'பயங்கரவாத' முகாம் பூசி கலவரங்களை கட்டவிழ்த்து விடுவது இலங்கை அரசின் நோக்கம் என்று அச்செய்தி கூறுகிறது.

மலையகத்தில் நடைபெற்று வரும் சிங்கள குடியேற்றங்களும் அக்குடியேற்றவாசிகளுக்கு அளிக்கப்படும் ஆயுதங்கள் பயிற்சி மற்றும் சலுகைகள் இலங்கை அரசின் நோக்கத்தை உறுதிபடுத்துவதாக இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

அட்டன் - கொட்டகலை என்ற நகர்களுக்கிடையிலுள்ள குடா ஓயா என்ற இடத்தில் திட்டம் போட்டு தேயிலைத் தோட்டங்களை காடாகப் போட்டு பின்னர் அழித்து [illegible] ஏக்கரில் சிங்கள குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இதில் 1500க்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களை குடியமர்த்தி வருகிறது,

இது போன்று அக்கரைப்பத்தனை, அக்கரமலை ஆகிய இடங்களிலும் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு முனைந்துள்ளது.

வடகிழக்குப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து ஆயுதங்கள் அளிக்கப்பட்டிருப்பது போல இங்கு குடியேறப் பட்டவர்களுக்கும் துப்பாக்கிச் சுடும் பயிற்சி அளிக்கப்பட்டு துப்பாக்கிகளும் வழங்கப்பட்டிருப்பதாக செய்தி தெரிவிக்கிறது.

மலையகத் தமிழ் மக்கள் ஒன்றரை நூற்றாண்டுகளாக வாழ்ந்தும் அளிக்கப்படாத சலுகைகளை இங்கு குடியமர்த்தப் பட்டவர்களுக்கு அளித்திருக்கிறது ; தங்கு தடையில்லாது எந்நேரமும் கிடைக்கும் வகையில் மின்சாரம், வீடு நிலம், விவசாயத்திற்கும், கால்நடைப்பராமரிப்புக்கும் கடன் முதலாக பல சலுகைகளை அளித்துள்ளது.

குடா ஓயா குடியிருப்பில் இராணுவ முகாம் ஒன்றையும் ஏற்படுத்திருக்கிறதாம்.

இந்த குடியேற்றத்தை துவரெலியா பகுதியை நோக்கியோ, அல்லது அட்டனை நோக்கியோ விஸ்வதரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாம்.

இதன் மூலம் செறிந்தும் நெருங்கியும் வாழும் மலையக மக்களைத் துண்டிப்பதும், வன்செயல்கள் போது ஒருவரிடமிருந்து ஒருவருக்கு உதவி கிடைக்காதவகையிலும் தடுப்பதுமே இதன் நோக்கம் என அச்செய்தி விவரிக்கிறது.

மலையகத்தமிழ் மக்களாகிய தோட்டத் தொழிலாளர்கள் மீது அரசு கடைப்பிடித்து வரும் தவறான போக்குக்கு தொழிற்சங்கங்கள் எந்த நடவடிக்கையும்- எதிர்ப்பையுமோ தெரிவிக்காதிருப்பது தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்திருக்கிறது.

இந்த குடியேற்றங்களும், இளைஞர்கள் திடீர் திடீரென கைது செய்யப்படுவதும் தோட்டப்பகுதியில் — மலையகத்தில் பதற்ற நிலையை ஏற்படுத்தி இருப்பதாக அச்செய்திகள் கூறுகின்றன. O

மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 சித்திரை-ஏப்ரல் '87 இதழ் 7

## இங்குமா இந்த நிலை !

தாயகம் திரும்பிய மக்கள் இலங்கை மண்ணில் சரித்திரம் படைத்தவர்கள். பல வருடங்கள் அங்கு வாழ்ந்தும் அந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தும் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்ற மக்களாக ஆக்கப்பட்டார்கள். ஒப்பந்த அடிப்படையில் துண்டாடப்பட்டார்கள் அப்படி இந்தியாவுக்கு நாடு கடந்து வந்தவர்கள் தான் தாயகம் திரும்பிய மக்கள்.

இலங்கையில் தொடர்ந்து வாழ்கிறவர்கள் குடியுரிமை-வாக்குரிமை என்று அரசியல், ஜனநாயக, குடியியல் உரிமைகள் பெற்றும் 'உரிமைகளை அனுபவிக்கும் சக்தியற்றவர்களாக சிங்கள அரசின் பேரினவாதத்தும் அடக்கு முறைகளுக்கும் உட்பட்டு எதிர்காலத்தின் கேள்விக்குறியாக நிற்கிறார்கள்.

இந்த கேள்விக்குறிக்கு விடையாக ஒரு பகுதியினர் (சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ்) தாமே விரும்பி இந்த நாட்டிற்கு வந்தார்கள்-இந்தியக் குடியுரிமை பெற்றவர்களாக சுயமரியாதையோடும். எதிர்கால நம்பிக்கையோடும் வாழ வந்த இந்த மண்ணிலும் பேதங்கள், எதிர்ப்புகள் இவர்களை விட்டு வைக்கவில்லை என்பது வேதனைப்படத் தக்கது.

'நீலகிரி மாவட்டத்தில், இலங்கை அகதிகளால் அளவிற்கு அதிகமான மக்கள் குடியேற்றம் ஏற்பட்டு விட்டது. சட்டம், ஒழுங்குக்கு புறம்பான குடியேற்றம் நடைபெறுகிறது, மூன்றாண்டுகளாக குற்றம் புரிவது அதிகரித்து விட்டது அதனால் இலங்கை அகதிகள் நீலகிரியில் குடியேறுவதை நிறுத்துங்கள்' என்று 'நீலகிரி மக்கள்' என்ற ஒரு பகுதியினர் இந்த மக்களுக்கு எதிரான மனு ஒன்றை சட்டமன்ற மனு பரிசீலனை தலைவருக்கு கொடுத்திருக்கின்றனர். இதற்கு முன்னாலும் இதுபோன்ற மனுக்கள் தமிழக முதல்வர் முதல் பலருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இலங்கை அகதிகள் என்று அவர்கள் கூறும் தாயகம் திரும்பியோருக்கு முன்னால் பல குடியேற்றங்கள் நடந்து இருக்கின்றன. அவைகளுக்கு காட்டப்படாத எதிர்ப்பை இவர்களுக்கு காட்டுவதேன்? இவர்களை தடைசெய்ய வேண்டும் உண்மைக்குப்புறம்பான காரணங்கள் காட்டப்படுவதேன்? அரசே மலைத்தோட்டங்களை உருவாக்கி தாயகம் திருப்பியோர்களை குடியேற்றும் போது அதையொட்டி குடியேறும் போது இந்த எதிர்ப்பு ஏன்?

இங்கு குடியேறுவதை தடுப்பதும் வாக்குரிமை மறுப்பதும் தாயகம் திரும்பியோருக்கு எதிராக நடக்கும் அரசியல் சதியாகும் என்பதை இங்கு தெள்ளத்தெளிவாக கூறவிரும்புகிறோம்.

இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என தாயகம் திரும்பியோர்சமூக நலச் சங்கங்களுக்கு அறைகூவல் விடுகிறோம் - இந்த பிரச்சாரத்தின் தீமையை உணர்ந்து ஆரம்பத்திலேயே தடுக்காவிட்டால் இங்கேயும் தாயகம் திரும்பிய மக்களின் சமூகம் நிம்மதியாக வாழ முடியாது வாழும் நிலை ஏற்பட்டு விடும் என்பதை தெளிவுறுத்துகிறோம்.

# மலையக மக்கள் மறுவாழ்வு மன்றக் கலந்துரையாடல்

கோத்தகிரி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் தாயகம் திரும்பியோர் மத்தியில் ஒரு கலந்துரையாடல் கூட்டத்தை 8. 3. 87 அன்று குன்னூரில் விஜய நகர மாளிகையிலும், சேலாஸ் பஞ்சாயத்து யூனியன் ஆரப்பப்பள்ளியிலும் நடத்தியது.

இக்கருத்தரங்கம் காலையில் மேற்படி மாளிகையில் நடத்தப்பட்டதன் நோக்கத்தை, அதே மாளிகையில் குடியிருக்கும் அப்பகுதி பஞ்சாயத்து கவுன்சிலருமான திரு. பழனிச்சாமி என்பவர் விளக்கினார்,

கூட்டம் நடத்த கட்டிடம் விஜய நகர ராணிக்கு சொந்தமான கட்டிடமாகும், இதனை பராமரிக்கும் பொறுப்பை ஒருவரது கையில் விட்டு விட்டு ராணி வெளியூர் செல்லவே, அவர் அந்த இடத்தை வாடகை விட்டு விட்டார், குடியிருப்பாளர்கள் அதிகரித்து இப்போது அங்கு சுமார் 90 குடும்பங்கள் வசித்து வருகின்றன அவற்றுள் கிட்டத்தட்ட 70 குடும்பங்கள் தாயகம் திரும்பியோர்களாவர்.

15 வருடங்களுக்கு மேலாக குடியேறியிருக்கும் அவர்களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது பல பிரச்சனைகள் தலைத்தூக்கின, போலீஸ், கோர்ட் என்று தலையிட்டு தொடர்ந்து அவ்விடத்திலேயே வசிக்கவும், அந்த இடத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் போராடி வருகின்றனர்.

அவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் கலந்துக் கொண்ட சென்னை, தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆய்வு மற்றும் தகவல் மைய இயக்குனர் திரு. ஆர். ஆர், சிவலிங்கம் பேசுகையில், இந்த உரிமைப்பிரச்சனையில் ஒன்றுபட்டு குரல் எழுப்பினால் நிச்சயம் வெற்றி பெறலாம். அதற்கு மன்றம் துணைநிற்கும். இந்திய அரசின் சட்டப்படி மகாராஜாக்களின் சொத்துகள் பொது உடமையாக்க வேண்டும் என்று இருக்கிறது அந்த வகையில் இந்த போராட்டம் சரி" என்றார்

இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்தும், கலந்துக் கொண்டும், திருச்செந்தூரான், சந்திரசேகரன், வண, பிதா ஏப்ரஹம் அவர்கள் ஏ.சி.டேன், கோவிந்தசாமி, சாந்த கிருஷ்ணன், கிருஷ்ணன் மற்றும் பல கருத்துரை வழங்கினார்கள்,

சேலாஸ் பஞ்சாயத்து பள்ளியில் நடைப்பெற்ற கூட்டத்தில் பலர்கருத்துரை வழங்கினர்.

மலையகம் மக்கள்மறுவாழ்வு மன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

## சந்தா விவரம்

தனிப்பிரதி 75 காசுகள்

ஆண்டு சந்தா ரூபா 10 00

மாதிரி பிரதி பெற விரும்புவோர் ரூபா 1/-க்கான அஞ்சல் தலை அனுப்ப வேண்டும்.

விபரங்களுக்கு :

**மக்கள்மறுவாழ்வு**

அஞ்சல் பை எண். 5560

சென்னை - 600 094.

# உறுப்பினராவதற்கு தடையை நீக்குக!

## வங்கி பேரவை கூட்டத்தில் கோரிக்கை!!

**"இந்திய நாட்டின் விடுதலைக்காக பர்மிய நாட்டில் தேசிய மாவீரன் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் பாடுபட்ட பர்மா தமிழர்களுக்காகவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளால் இலங்கை சென்று அவதிப்பட்டுத் திரும்பிய தமிழர்களின் நலனுக்காகவும் உள்ளது இந்த வங்கி என்பதை மறந்துவிடாமல் மேலும் மேலும் சிறப்பாக செயல்பட திட்டங்களை வகுக்க வேண்டும். விரிவாக்கப்பணிகளைச் செய்ய வேண்டும்"**

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் 11-வது பிரதிநிதத்துவ பேரவைக்கூட்டத்தில் உறுப்பினர் சார்பில் திரு உதயணன் கொண்டு வந்த தீர்மானத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் வைக்கப்பட்ட கோரிக்கைகள், தீர்மானங்களாக இந்த ஆண்டு கூட்டத்திலும் நம்பிக்கையோடு கொண்டு வரப்பட்டது அத்தீர்மானங்கள் வருமாறு—

## 1. தடையை நீக்குதல்

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்களின் மறுவாழ்விற்கென ஏற்படுத்தப்பட்ட தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ம் நாள் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கி தாயகம் திரும்பிய தமிழர்களை உறுப்பினராகக் கொண்டு "ஓர் கூட்டுறவு நிறுவனமாக" செயல்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டும் இடையில் ஒரு சிலரால் உறுப்பினராகும் தகுதியில் ஓர் நிபந்தனையை உருவாக்கி அதன் மூலம் தாயகம் திரும்பிய தமிழர்கள் தாயகம் திரும்பிய மூன்று (3) ஆண்டுகளுக்குள் உறுப்பினராகத் தவறினால் பிறகு என்றுமே உறுப்பினராக சேர முடியாத நிலையை உருவாக்கிவிட்டார்கள். இதனால் தாயகம் திரும்பிய தமிழர்கள் பல்லாயிரம் பேர் அவர்களுக்காகவே உருவாக்கப்பட்ட வங்கியில் உறுப்பினராகச் சேர முடியாமல் உள்ளார்கள். இந்த செயல் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட தண்டனையாகக் கருத வில்லை. இந்த செயல் கூட்டுறவுத் துறைக்கே ஓர் அவப்பெயரை உருவாக்கி உள்ளதாகக் கூட்டுறவுத்துறையில் அனுபவமிக்க பலர் கூறுகின்றனர்.

தென்னிந்தியா முழுவதும் பரவியுள்ள தாயகம் திரும்பிய தமிழர்களுக்கென மத்திய அரசால் நடத்தப்பட்டுவரும் ஒரே கூட்டுறவு வங்கி, தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியாகும். இந்த வங்கியில் உறுப்பினராவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடையை நீக்கி, விருப்பமுள்ள தாயகம் திரும்பியுள்ள எவரும் பங்குத் தொகை செலுத்தி உறுப்பினராகலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று இப்பேரவை, ஒரு மனதாக தீர்மானிக்கிறது இதன்மூலம் வங்கியின் பங்குத் தொகை உயர வழிவகை ஏற்படும்.

## 2. முதலீடுகள் சேர்த்தல்

தாயகம் திரும்பிய தமிழர்களில் மிகப் பலர் தங்கள் முதலீடுகளை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் முதலியவற்றில் முதலீடு செய்துள்ளதை இப்பேரவை நன்கு அறியும்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மத்திய அரசிடம் பெறும் கடன் தொகையை நம்பித்தான் செயல்படுகிறது என்பதை அனைவரும் அறிவோம். இந்நிலை எதிர்காலத்திலும் தொடரும் என்பதில் எவருக்கும் சந்தேகம் வருவதுண்டு. எதிர்காலத்திலும் மத்திய அரசிடம் எதிர்பார்ப்பது சரியல்ல. எனவே தாயகம் திரும்பிய தமிழர்களிடம் முதலீடுகள் பெற்று எதிர்காலத்தில் சுயமாகச் செயல்பட தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி இப்பொழுது தயாராக வேண்டும். வங்கி சட்டம் 5 (ஐ வி.) ல் முதலீடுகளை உறுப்பினர்களிடமிருந்து பெறுவதற்கு வழி வகை செய்யப் பட்டிருந்தும் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ளாததால் முதலீடுகளை நாம் பெறமுடியவில்லை எனவே வங்கி உடனடியாக இந்தச் செயலை தீவிரப்படுத்த வேண்டுமென்று இப்பேரவை ஒரு மனதாகதீர்மானிக்கிறது.

## 3. சேவையை விரிவுபடுத்துதல்

சிறிய கூட்டுறவு வங்கிகள் எல்லாம் பெரிய சேவைகளை நாட்டுமக்களுக்கு செய்துவருவதை நாம் அறிவோம். வியாபாரக்கடன், வீடு கட்ட கடன், நகைகள் மீது கடன் போன்றவற்றை சிறப்பான முறையில் கொடுத்து செயலாற்றி உறுப்பினர்களுக்கு உதவிசெய்து நல்ல லாபத்தோடு செயல்படுவதை அனைவரும் அறிவோம்.

நமது தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியும் தாயகம் திரும்பியோர்களுக்கு அசையாத சொத்துக்கள் வியாபாரக் கடன், வீட்டுக் கடன், நகைகள் மீது கடன் போன்றவற்றை செயல்படுத்தி இந்தியாவிலேயே தலைசிறந்த கூட்டுறவு நிறுவனமாக தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி செயல்பட வேண்டும்.

15 ஆண்டுகளுக்கு முன்பு வியாபாரம் செய்யக் கொடுத்த கடன் அனுபவத்தை யாரும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாம். அன்று கொடுத்த கடன்கள் சொத்துக்கள் அடமானத்தின் மீது கொடுக்கப்பட்ட கடன்கள் அல்ல! வியாபாரம் தெரிந்தோர், வியாபாரம் தெரியாதோர் அனைவருக்கும், மறுவாழ்வு பெறட்டுமே என்ற நல்லநோக்கத்தோடு கொடுத்த கடன்களாகும். வியாபார அனுபவம் உள்ளோர் தொழில் செய்து கடனைத் திருப்பிச் செலுத்தினர், வியாபார அனுபவம் இல்லாதோர் கடன்களை திருப்பிச் செலுத்த முடியவில்லை.

ஆனால் இப்போது கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற கடன் வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு மட்டும், அதோடு அப்படிப்பட்டவர்கள் அசையாத சொத்துக்களை அடமானம் வைக்க வேண்டும்.

நகைக் கடன்களும் நகைகளை அடமானம் பெற்றே கொடுப்பதால் வங்கிக்கு எந்தவிதத்திலும் நட்டம் ஏற்பட வழி இல்லை. மேலும் லாபத்தோடு வங்கி சிறப்பாக இயங்கிச் செயல்பட முடியும் -இவ்வாறு அத்தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. O

## வட்டிச் சலுகையை நீடித்திடுக!

வட சென்னை பிரதிநிதி திரு நீலமேகம் ஒரு கோரிக்கையை முன் வைத்தார்.

"கடன் பெற்று வட்டியும் அசலும் கட்டிக்கொண்டுவரும் நபர்களுக்கு, அவர்களுக்கு அளித்திருந்த 4½% வட்டி என்ற சலுகையின் காலக்கெடு முடிந்து விட்டத்தின் காரணமாக மீண்டும் அவர்களுக்கு அதிக வட்டியைக் கணக்கிட்டு சுமார் ரூபா 1000 - பாக்கி செலுத்த வேண்டியவர்கள் வட்டி அதிகப்படுத்தியதின் காரணமாக சுமார் 6000/- வரை கட்ட வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. இதனால் உண்மையிலேயே கட

(8-ம் பக்கம் பார்க்க)

### தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி பிரதிநிதித்துவ பேரவை கூட்டம் :

# நோக்கத்திற்கும் உரிமை

# தடை

ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் வைபவம் போல, இந்த ஆண்டும் 6-3-87 அன்று தாயகம் திரும்பியோர் வங்கி பிரதிநிதிகளின் 11வது பேரவைக் கூட்டம் நடத்து முடிந்தது.

பிரதிநிதிகள் கூட்டத்திற்கு சமூகமளித்து, கையெழுத்து போட்டு வங்கியின் வரவு செலவு கணக்கு மற்றும் திட்டத்தை அங்கீகரிப்பதும், வங்கியின் 'விருந்துபசாரத்தில்' கலந்து கொள்வதும், கூட்டத்திற்காக வழங்கப்படும் பங்கேற்புப்படி, பயணப்படி, தினப்படி என்று ஒரு தொகையை பெற்றுக் கொண்டு திரும்புவதுமே என்ற வாடிக்கையான நிகழ்ச்சிகளோடு நடந்து முடிந்தது.

தாயகம் திரும்பியோர்களின் (குறிப்பாக பர்மாவிலிருந்து திரும்பியோர்கள்) முயற்சியால் தாயகம் திரும்பியோர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட வங்கி இது. அதுவும் கூட்டுறவு வங்கியாகும்.

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சார்பாளர்கள் (டெலிகேட்டுகள்) தெரிவு செய்வதும் வருடமொரு முறை பேரவை கூட்டத்தில் கலந்துக் கொண்டு வங்கி கணக்கு வழக்குகளுக்கு அங்கீகாரம் கொடுத்து விட்டு போவதும் மட்டுமே இங்கே கூட்டுறவாக இருக்கிறது.

## அதிகாரிகள் அலட்சியம்

என்ன நோக்கத்திற்காக இந்த வங்கி ஆரம்பிக்கப் பட்டதோ அந்த நோக்கப்படி இந்த வங்கி மூலம் ,வேலை வாய்ப்பு பெற்ற தாயகம் திரும்பியோர்கள் பிரச்சனைகள் கஷ்ட நஷ்டங்கள் குறித்து, அவர்கள் சார்பில், அவர்களுக்காகவே தேர்ந்தெடுக்கப் படுகிற பிரதிநிதிகள் பேச இந்தகூட்டங்கள் இடம் அளிப்பதில்லை. வருடம் ஒருமுறை நடக்கும் கூட்டத்தில் நேரம் இல்லை என்று தட்டிக் கழிக்கப்படுகிறது. நேரமும் ஒதுக்கப்படுவதில்லை, நிகழ்ச்சி நிரலில் போடப்படும் கணக்கு வழக்கு அங்கீகாரம் குறித்து மட்டுமே அக்கறையாக இருந்து காரியத்தை நிறைவேற்றுவதில் வங்கி அதிகாரிகள் குறியாக இருப்பது வழக்கமாக இருக்கிறது.

## பழிதீர்ப்பதே பணியா?

எந்த நோக்கத்திற்காக இந்த வங்கி செயல்படுகிறதோ அது சம்மந்தப்பட்ட தாயகம் திரும்பியோர் பிரச்சனைகள் குறித்து வங்கி நிர்வாகத்திற்கு - அதிகாரிகளுக்கு அக்கறை இருப்பதாக தெரியவில்லை. மனிதாபிமானம் ஈவிரக்கம் இவர்களுக்கு துளியும் இருப்பதாக தெரியவில்லை.

அதிகாரத்தை தாங்கள் கையில் எடுத்துக்கொண்டு கூட்டுறவு வங்கி என்ற அடிப்படையில் அதன் பங்குதாரர்களாகி தாயகம் திரும்பியோருக்கு - அதன் பிரதிநிதிகளுக்கு இருக்கும் உரிமைகளை மறுப்பதிலும் குறைப்பதிலும் ஒழிப்பதிலுமே குறியாக இருந்கிறார்கள். இதுவே தான் இவர்களின் நிர்வாகப் பணிகளாகவும் இருக்கிறது என்பது பலருக்கு தெரிந்த உண்மை.

கடந்த கூட்டத்தில் நடந்த சில சம்பவங்கள் கூட இதற்கு உதாரணம் என்பதை விபரம் புரியாத சார்பாளர்கள் உணர வேண்டும்.

எந்த கூட்டத்திற்கும் இல்லாத வழக்கமாக இந்த கூட்டத்திற்கு அடையாள அட்டை இருந்தால் தான் அனுமதிப்போம் என்ற திடீர் உத்தரவு போட்டது அதிர்ச்சிதரக்கூடிய நிகழ்ச்சியாகும். ஆயினும் சார்பாளர்கள் ஒருமித்து எதிர்ப்பு தெரிவித்ததால் அடையாள அட்டை இல்லாமலே பின் அனுமதித்தார்கள்.

## காரணம் என்ன?

அடுத்ததாக சில உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பிரதிநிதித்துவ பேரவையின் அமைப்புக்கான ஒழுங்கு விதி எண் 5 (iii) கீழ் குறிப்பிடப் பட்டுள்ள குற்றங்கள் இழைத்தவராக இருந்தால் அனுமதி மறுக்கப்படும் என்பதாகும்.

இப்படிகுற்றம் ஏதும் இழைக்கப்பட்டதாக கருதப்பட்டு அனுமதி மறுக்கப் பட்டவர்களில் தாயகம் திரும்பியோர் சார்பாக தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் திரு. லிங்கம் அவர்களும் அடங்குவார்.

ஆயினும் இவர் பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அதிகாரிகள் மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து இவர் வெளியேறினார்.

நமது கேள்வி எல்லாம் மேற்படி பிரிவின் கீழ் ஏதேனும் விதிமுறைக்கு முரண்பட்டிருந்தால் சட்ட நுணுக்கமும் விவரமும் தெரிந்த இவர் இந்த கூட்டத்திற்கு வருவாரா? ஜூனியர் விகடன். குறிப்பிட்ட 'சிமிண்ட் ஊழல்' என்ற விவகாரத்தில் இவர் குற்றவாளியாயின் (இந்த பிரச்சனை ஒன்றரை ஆண்டுக்கும் முன்னாலேயே வெளிவந்த செய்தி; மலையாள பத்திரிகையில் வந்து விட்டது அதற்கு பின்னால் 1986 கூட்டத்தில் இவர் கலந்துக் கொண்டிருக்கிறார் என்பது இங்கு நினைவு கொள்ள வேண்டியது) இவர் எந்த அடிப்படையில் கூட்டத்தில் கலந்து கொள்ள வருவார்?

## அவமதிப்பு

கூட்டத்திற்கு வந்தார் அதிகாரிகள் மறுப்பு தெரிவிக்க வெளியேறினார். ஆனாலும் அவர் எந்த வகையில் என்ன காரணத்திற்காக அனுமதி மறுக்கப்பட்டார் என்பதை தெரிவிக்கவில்லை.

அதுமட்டுமல்ல; இயக்குனர் லிங்கம் கூட்டத்திற்கு வந்த போதுதான், மண்டபத்திற்கு வெளியே 4-3-87 தேதியில் கையெழுத்திட்ட ஒருஅறிக்கை ஒட்டப்பட்டிருந்தது மூலம் தனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டுள்ளார்.

இவர் தாயகம் திரும்பியோர் சார்பு இயக்குனர் என்கிற வகையில் முன்னதாக இது குறித்து அவருடன் அதிகாரிகள் பேசி இருக்கலாமே. இப்படி ஒரு பதவியை கொச்சைப் படுத்தலாமா? இப்படி கொச்சைப்படுத்துவதன் மூலம் தாயகம் திரும்பியோர்களை வங்கியின் பங்காளர்களை அதிகாரிகள் இழிவு படுத்துவதா?

தாயகம் திரும்பியோர்களின் சார்பாளர்களின் சார்பில் மூன்று இயக்குனர்களை நியமிக்க வேண்டும். ஆனால்

# ரக்கும்

இருப்பது ஒரே ஒரு இயக்குனர் தான்.

## தூத்துக்குடி கூட்டத்தில்

மூன்று இயக்குனர்களை நமக்கு கொடுக்க மனசுவராத அதிகாரிகள் கொடுக்கப்பட்டுள்ள ஒரு இயக்குனர் விடயத்தில் சார்பாளர்கள் குடுமியைப் பிடித்துக் கொண்டு சண்டையிடட்டும் என்கிற வகையில் தூத்துக்குடி கூட்டத்தில் நிர்வாக இயக்குனர் பேசியிருப்பது வருந்தத்தக்கது.

# போடுவதா?

அந்த கூட்டத்திற்கு இலங்கையிலிருந்துவந்த தா.தி.சார்பாளர்களே கலந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்துக் கொண்ட நிர்வாக இயக்குனர் "நீங்கள் ஏன் இலங்கையிலிருந்து வந்த ஒருவரை இயக்குனராக தேர்ந்தெடுக்கக் கூடாது? பர்மாவிலிருந்து வந்தவரை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?" என்று கேட்டுள்ளார்.

இது தான் எதைக் காட்டுகிறது?

உன்னை யாரடா உட்கார சொன்னது? எழுந்து நில்லுடா! என்று தாயகம் திரும்பியோர்களை இழிவாக நடத்தும் இந்த அதிகாரிகள் தாயகம் திரும்பியோர் சார்பு இயக்குனருக்கு என்ன மரியாதை கொடுப்பார்கள்? 'அகதிகள் இயக்குனர்' எப்படி தமக்கு சரிக்குசமமாக இருப்பது? பேசுவது? விசயம் தெரிந்தவராக இருப்பது? கேள்வி கேட்பது? என்று பழி வாங்கும் மனப்பான்மையோடு நடந்துக் கொள்கிறார்கள் என்பது விசயம் அறிந்தவர்களுக்கு தெரியும்.

தா.தி.சார்பு இயக்குனருக்கு கூட்டத்திற்கு கலந்து கொள்ள அனுமதி மறுத்தது கலந்துக் கொள்ளாமல் செய்தது திட்டமிட்ட பழி வாங்குதலேயாகும்.

## வெளிவந்த செய்திகள்

அடுத்ததாக ஜுனியர் விகடனின் வந்த செய்திகள். செய்திகள் மிகவும் தெளிவாகவும், விபரமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. விபரம் தெரிந்தவர்கள் —அதுவும் வங்கியின் பணி செய்யக் கூடியவர்களாலேயே இந்த அளவிற்கு உண்மையை தெரிவிக்க முடியும்.

வங்கியின் நிர்வாகம் குறித்து இந்தளவிற்கு வெளியே செல்லுமானால் எந்தளவிற்கு வங்கியின் நிர்வாகம் இருக்கிறது என்பதை புரிந்துக்கொள்ள முடியும்.

விபரம் தெரிந்தவர்களில் இவ்வளவு தெளிவாக செய்திகள் வெளிடப்பட்டிருக்கும் போது இந்த செய்திகளில் உண்மை இல்லை என்பதை நாம் ஒதுக்கி விட முடியாது.

அப்படி உண்மையுள்ள செய்திகளை, பத்திரிகை செய்திகள் தானே; இதை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை பெரிது படுத்த வேண்டாம் என்று பேரவைக்கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்ததில் என்ன நியாயம் இருக்க முடியும்?

தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு ஒரு நியாயம்; தாயகம் திரும்பியோர்களுக்கு ஒரு நியாயமா? என்ன கூட்டுறவோ!

## வழக்கம்போல உறுதிமொழிகள்

வழக்கம் போல, இந்த கூட்டத்திலும் ஏதோ சிலர் உணர்ச்சிவசமாக தங்கள் கருத்துகளை தெரிவித்தார்கள். கிடைத்த நேரத்தில் தாயகம் திரும்பியோர் பிரச்சனை எடுத்துரைத்தார்கள்.

வழக்கம் போல அதிகாரிகளும் அவற்றிற்கு பதில்கள் என்ற சமாதானங்கள் கூறிவிட்டு உறுதி மொழிகளையும் கூறினார்கள் — இதற்கு முந்தைய கூட்ட உறுதிமொழிகளுக்கு என்ன தான் நேர்ந்ததோ?

இதில் ஒவ்வொரு பிரச்சனையும் சார்பாளர்களின் — பங்குதாரர்களாகிய தாயகம் திரும்பியோர்கள் உரிமைகளை பறிக்கிற பிரச்சனைகள்; நலனுக்கு ஊறுசெய்கிற சமாச்சாரங்கள்.

ஆனால் —

இந்த பிரச்சனைகள் குறித்து அமைதியோடு இருந்து சார்பாளர்கள் கேட்டுவிட்டு போவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது— வேதனையாகவும் இருக்கிறது.

கடந்த காலங்களில் இந்த வங்கி உருவாகவும், செயல்படவும், சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதிலும்— தாயகம் திரும்பியோர் சார்பு இயக்குனர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதிலும் அவ்வப்போது வந்த சார்பாளர்கள் காட்டிய அக்கறை நடத்திய உண்ணாவிரத போராட்டங்களை மறந்து விட முடியாது.

## "உற்சவத்திற்கு வரும் சார்பாளர்கள்

இப்போது இருப்பவர்கள் கடந்த காலத்தில் இந்த வங்கியின் வளர்ச்சிக்கும், தாயகம் திரும்பியோர்களின் நலனுக்கும் எடுத்துக்கொண்ட நடவடிக்கை குறித்து அறிய மாட்டார்கள்.

இப்போது இருப்பவர்கள், ஆண்டுக்கொரு முறை நடக்கும் உற்சவத்திற்கு வருவது போல வந்து விட்டு போகிறார்கள் தலையில் இடிவிழுந்தாலும் கவலை இல்லை; வருகிறோமா சாப்பாடு கிடைக்கிறதா; பயணப்படி கிடைக்கிறதா முடிந்தது கடமை என்று போகிறார்கள், இந்த நிலை மாற வேண்டும்.

இனி அடுத்து வரும் தேர்தலில் தகுதி வாய்ந்த சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அற்ப காரணங்களுக்காக- அற்ப சுகங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படுவதை விட்டுவிட்டு - உண்மையான தியாக மனப்பான்மையுள்ளவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்,

## நமது நோக்கம்

நம்முடைய நோக்கம் இந்த வங்கி தாயகம் திரும்பியோர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு முழுமையாக நன்மையும் செய்யும் வகையில் - அவர்களே அதிகாரத்தில் இருக்கும் வகையில் - எல்லோரும் இந்த வங்கி மூலம் பலன் பெறும் வகையில் - கூட்டுறவு வங்கி என்ற லட்சியத்திற்கேற்ப அனைவரும் பங்கு கொள்ளும் வகையில் மாற வேண்டும் என்பதே உறுப்பினர் சேர்ப்பதிலுள்ள தடையை நீக்குவது; நம்முடைய பங்குகளை அதிகரிக்க வைப்பது; சட்டப்படியான உரிமைகளை அடைய முயற்சிகள் மேற்கொள்வதுமே நோக்கமாக இருக்க வேண்டும்,

பேரவை கூட்டம் என்று நடக்கும் வருட உற்சவத்தில் கலந்து கொண்டு விட்டு, சாப்பிட்டு, படிகள் பெற்று செல்வதல்ல நமது பணியும் கடமையும் என்பதை உணர வேண்டும்.

- 'சார்பாளன்'

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## ( 8 )

காதலர் ஊடி பிணங்குவதும் தோட்டப்புற வாழ்க்கையில் காணும் காட்சி. இந்த காட்சிகளை நாட்டுப்புற பாடல்களில் காணலாம்.

அவன் காதலிக்காக ஒரு நாள் முழுதும் காத்திருந்து ஏமாந்துப் போகிறான் மறுமுறை அவனைக்காணும் போது அவரிடத்தில் ஊடுகிறான். அவளோ அவனை சமாதானப் படுத்துகிறாள். தான் வராத காரணம் கூறுகிறாள். அதுவும் காதலனின் கோபமெல்லாம் பறந்து போகிற மாதிரி தெரிவிக்கிறாள் -

"கல்லு வெள்ளி மோதிரமே
காந்தக் கல்லுச் சந்திரனே
உருலோசு சங்கிலியே
உன்னாலே சீக்கிருந்தேன்"

(குறிப்பு; சீக்கு - லீவு; விடுமுறை; SICK eave என்பது பேச்சுவழக்கில் மறுவி சீக்கு என்றாகியது.)

அவளோ நம்பவில்லை. அப்படி என்றால் நேற்று நீ ஏன் ஆற்றுப்பக்கம் வரவில்லை. கேட்கிறான -

"என்னாலே சீக்கிருந்தால்
ஏன்டி வல்ல ஆத்துப் பக்கம்
ஆத்துப் பக்கம் போயி மணி
ஆறுவரை காத்திருந்தேன்"

அதற்கு அவள் காரணம் கூறுகிறாள் -

"அப்பன் கண்ணு என்மேலே
ஆத்தாக்காரி திண்ணமேலே
எப்படி நான் வந்திடுவேன்
எடுத்துச் சொல்ல வேணுமாக"

அவனுக்கோ நம்பிக்கை பிறக்க வில்லை. அவள் மீது சந்தேகம்; என்ன சொல்லி வேதனையுறுகிறான் தெரியுமா?

"ஸ்டோரு மெத்தையிலே
விட்டெறிஞ்சன் சொக்கலேட்டு
வாங்கியும் தான் தின்னுப்புட்டு
வஞ்சமும் தான் செய்யா தேடி

(குறிப்பு : ஸ்டோர்மெத்தை - தேயிலை அறைக்கும் தொழிற்சாலையின் மாடி)

நீண்ட நாட்கள் ஊடல் கொண்டு பிணங்கி இருந்த அவர்கள் மீண்டும் கூடினார்கள் அங்கே மகிழ்ச்சி பொங்குகிறது.

"காசிக்கட்டி கழிபாக்கு போல
கவலை எல்லாம் தீர்த்த மச்சான்
கொட்டப் பாக்கு கொழுந்து வெத்தல போல
கோபமெல்லாம் தீர்த்த மச்சான்"

இருவருக்கும் ஊடல். அவனால் தன்னிடம் பேசாமல் இருக்க முடியாது. பார்க்காமல் தூங்கமுடியாது. அப்படி இருந்தவன் இப்படி இருக்கிறானே?

## 'தேனூரன்'

நினைக்க அவளுக்கு அவன் மீது ஐயம். மனம் குறுகுறுக்கிறது. சாடையாக குத்தலாகவே சொல்கிறான்

"கன்னங் கருத்த முத்து
கடலோரம் விளைஞ்ச முத்து
இங்கிலீஸ் படிச்ச முத்து
எவளெடுத்து கொஞ்சப் போற"

என்று தன் ஐயத்தைச் சுட்டிக் காட்டுவதோடு நிற்கவில்லை அவனுக்கு உறைக்கிறார் போல அவனை கொஞ்சப் புகழ்ச்சியும் பாடுகின்றான்

பிணக்கு தீர்ந்தது. ஊடல் நீங்கி கூடுகின்றனர். ஊடலில் பிரிந்திருந்த வேதனை அவளுக்குத் தான் தெரியும். அப்படி பட்ட ஊடலும், பிரிவும் திரும்பவும் வந்து விடக்கூடாது அதற்கு காரணமாக இருந்தவன் அவன் தான். அவனிடத்தில் வலக்கையில் அடித்து சத்தியம் செய்யச் சொல்கிறான்

"அரக்கு லேஞ்சுகார மச்சான்
மறக்க விட்ட கண்ணாளா
மறக்கவில்லை என்று சொல்லி
வலக்கைப் போட்டு தாடா"

என்று கேட்கிறாள்.

(தொடரும்)

# பிரதமரின் 20 அம்சத் திட்டம்

(தொடர்ச்சி)

## குடிசைப்பகுதி அபிவிருத்தி

குடிசைப்பகுதிகளில் வளர்ச்சியை கட்டுப்படுத்துவோம்.

தற்பொழுதுள்ள குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை வழங்குவோம்.

நகர்புற பகுதிகளில் திட்டமிட்ட வீடு கட்டும் முறையினை ஊக்குவிப்போம்.

## வனவளர்ப்புக்கு புதிய யுக்தி

மேலும் கூடுதலாக மரங்களை வளர்ப்போம். மேலும் வனங்களை உருவாக்குவோம் இவற்றில் மக்களை முழு அளவில் ஈடுபடுத்துவோம்.

விறகு மற்றும் விளை பொருள்களை அடைவதற்கு பழங்குடியினருக்கும், அத்தந்த பகுதி மக்களுக்கும் உள்ள பாரம்பரிய உரிமைகளை பாதுகாப்போம்.

தரிசு நிலங்களை பயனுள்ள உர்பத்திக்காக சீர்திருத்தம் செய்வோம்.

மலைப்பகுதி, பாலைவனப் பகுதி மற்றும் கடலோரப்பகுதிகளில் பொருத்தமான தாவர இனங்களை வளர்ப்போம்.

## சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு

சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு அடைவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வை உயர்த்துவோம்.

சுற்றுபுற சூழலை பாதுகாப்பதற்கு பொதுமக்களின் ஆதரவை திரட்டுவோம்.

நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியின்படி உயிரின உடன்பாட்டை பாதுகாக்க

(7-ம் பக்கம் பார்க்க)

## 20 அம்சத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்என்ற உண்மையைப் பரப்புவோம்,

திட்டங்களை அமல் செய்ய பொருத்தமான இடங்களை தேர்வு செய்வதையும் அந்த திட்டங்களுக்கு பொருத்தமான தொழில் நுணுக்கத்தை தேர்ந்தெடுப்பதிலும் உறுதி செய்வோம்.

## நுகர்வோர் நலன்

ஏழை மக்களுக்கு அத்தியாவசிய நுகர்வு பொருள்களை எளிதாக கிடைக்க வகை செய்வோம்.

நுகர்வோர் நலனை பாதுகாக்கும் இயக்கத்தை அமைப்போம்.

மிகவும் தேவைப்படுகிறவர்களுக்கு மானியங்கள் கிடைக்கும் விதத்தில் விநியோக முறையினை சீர்திருத்தி அமைப்போம்.

பொது விநியோக முறையினை வலுப்படுத்துவோம்.

## கிராமங்களுக்கு மின்வசதி

கிராமங்களில் மின்சாரத்தை உற்பத்திக்காக பயன்படுத்துவதை விரிவு படுத்துவோம்.

மாற்று எரிசக்திகளை குறிப்பாக சாண எரிவாயுவினை பயன்படுத்துவதை வளர்ப்போம்.

கிராமப்புற மின்சக்திக்காக ஒருங்கிணைந்த பகுதி குறிப்புத் திட்டங்களை ஊக்குவிப்போம்.

## நிறைவு தரும் நிர்வாகம்

தடைமுறைகளை எளிமைப் படுத்துவோம்.

அதிகாரங்களை பகிர்ந்து வழங்குவோம்.

அந்த அதிகாரங்களுக்கு பொறுப்பேற்பதை அமல் செய்வோம்.

ஒன்றியம் முதல் தேசிய மாவட்டம் வரை கண்காணிப்பு அடைப்புக்களை ஏற்படுத்துவோம்.

பொதுமக்களின் குறைபாடுகளை பரிவுடனும், உடனுக்குடனும் கவனிப்போம். ○

# கல்வி கற்க விரும்புகிறவர்களுக்கு :

# ஆலோசனைகள் - தகவல்கள்

இலங்கையில் பள்ளிகளில் 10-ம் வகுப்புக்குக் கீழ்வகுப்புகளில் படித்து நின்றுவிட்ட மாணவர்கள் இங்குள்ள பள்ளிகளில் இலங்கையில் படித்து விட்ட வந்த வகுப்புகளில் சேர்ந்துப் படிக்கலாம்.

ஜூன் மாதத்தில் இங்கு பள்ளி சேர்க்கையில் போது அருகிலுள்ள பள்ளித் தலைமையாசிரியரை இலங்கையில் படித்தசான்றுகளுடன் அணுகினால் அப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஜூன். ஜூலை மாதங்களில் இல்லாமல் காலாண்டின் இடையில் வருபவர்களும் இங்கு வந்தவுடன் தமக்கு அருகிலுள்ள பள்ளிகளுக்குச் சென்று சேரலாம்.

## ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி

பள்ளியில் சேராது படிக்க விரும்புவோர் மற்றும் பள்ளி செல்லும் வயதைத் தாண்டிய எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் மற்றும் ஆரம்ப கலவியறிவுடையோர் இங்கு E. S. L. C. எனப்படும் எட்டாம் வகுப்புப் பரீட்சையில் தேர்வு பெறுவதன் மூலம் தமது கல்வியைத் தொடரலாம்.

தமிழ்நாடு அரசின் கல்வித் துறையினரால் நடத்தப்படும் இந்த E.S.L.C. பரீட்சைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆரம்பக் கல்வியறிவுடையோர் தகுதியானவர்கள் தமிழ் ஆங்கிலம் அறிவியல் வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடங்களில் எட்டாம் வகுப்பு ஆகிய பாடங்களில் எட்டாம் வகுப்பு தரத்தில் நடத்தப்படும் இப்பரீட்சைக்கு அரசு தனியாக வகுப்புகள் நடத்துவதில்லையெனினும் (அரசுப்பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயில்வோரும் இப்பரீட்சை எழுதலாம்) தனியார் கல்வி நிலையங்கள் TUTORIAL COLLEGE) இப்பரீட்சைக்கு வகுப்புகள் நடத்துகின்றன. ஒரு சில கல்வி நிறுவனங்கள் தபால் மூலமும் (POSTAL TUTIONS) பயிற்சியளிக்கின்றன. இப்பரீட்சையில் தேறியோர் பள்ளியிறுதி வகுப்பு படிக்கத் தகுதியுடையவர்.

திரட்டித் தருபவர் :

**ப செல்வராசன்**

இதுதவிர, ஓரளவு கல்வியறிவுடையோர்களுக்கு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் திட்டத்தின் கீழ் அறிமுகக் கல்வி (Introductory Course) என்னும் ஓராண்டுக் கல்வியை தபால் மூலம் நடத்தி வருகின்றது. இதற்கு 14 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும் இதில் சேர எந்த தேர்வும் நடத்தப்படமாட்டாது.

இந்த அறிமுகக்கல்வி படித்தவர்கள் தொடர்ந்து இதே பல்கலைக் கழகத்தில் முன் அடிப்படைக் கல்வி (Pre-formation Course) என்ற தொடக்க நிலையில் சேர்ந்து ஒரு வருடம் பயில வேண்டும். அஞ்சல் வழியில் நடத்தப்படும் இவ்வகுப்பில் பிறவழிகளில் எட்டாம் வகுப்பு (E. S. L. C) தேறியவரும், மற்றும் இலங்கையில் G.C.E (O/L) பரீட்சையில் தேறியவர்களும் சேரலாம்.

இந்த தொடக்கநிலை படிப்பு முடித்தவர்கள் தொடர்ந்து இப்பல்கலைக்கழகம் நடத்தும் அடிப்படைகல்வி (Foundation Course) என்னும் இரண்டு வருட படிப்பில் சேர்ந்து படிக்கலாம்.

இந்த இரண்டு வருட படிப்பில், S.S.L.C. தேர்வில் வெற்றி பெற்றோம், புதுமுக வகுப்பு பரீட்சை (Pre - University Course)யில் தோல்வியுற்றவர்களும் சேர்ந்து படிக்கலாம்.

இலங்கையில் G C E (O L) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றோரும், G C E (O/L) பரீட்சையில் தவறியோரும் இப்படிப்பில் சேர்ந்து பயிலலாம்.

இவ்வகுப்புகள் தபால் மூலம் நடத்தப்படுவதால் வேலைக்கு செல்கிறவர்கள் வீட்டில் வாய்ப்புகளின்றி, படிக்க வசதியின்றி இருப்பவர்களும் சேர்ந்து பயிலலாம், (இன்னும் வரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னை கட்டித்தீர்த்துவிட வேண்டும் என்பவர்கள் கூட கடனை கட்ட மறுக்கிறார்கள் ஆகவே 4½ % என்ற வட்டி சலுகையை மேலும் இரண்டு ஆண்டுக்கு நீடிக்க வேண்டும்.

"மேலும், லாரிக்கடன்கள் பெற்றவர்கள் கட்ட வேண்டிய மிகுதிக் கடனுக்காக லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டன. தற்போது அவர்கள் மீது பிடிவாரண்டு - சப்தி நடவடிக்கைகள் எடுப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தினறனர். அவர்கள் மீது காட்டப்படும் கெடுபிடியை நீக்க வேண்டும்" என்று தமது மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai Amman koil 2nd Street, Madras-600094. Printer: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B E. Colony, 4th Street. Madras-600024.

Regd No. R.N.42556/83 - Regd.No. TN/MS (C)702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறுவாழ்வு

முகவரி ;
அஞ்சல் பை. எண். 5560 சென்னை-600094

# தாயகம் திரும்பியோரின் குடியியல் உரிமையை மறுப்பதா?

## நீலகிரியில் குடியேறுவதை எதிர்ப்பதற்கு கண்டனம் !

"இந்திய குடிமகனாக உரிமை பெற்ற தாயகம் திரும்பிய மக்களின் வாழும் உரிமையை மறுப்பதா? இந்த நாட்டின் பல மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் நீலகிரியில் வந்து வாழ முடியுமென்றால் ஏன் தாயகம் திரும்பியோர்கள் வாழ முடியாது?"

இவ்வாறு கேட்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி தமிழக முதல்மைச்சருக்கு மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளது,

அனுப்பியுள்ள அந்த கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது.

1987 மார்ச் மாதம் 18ம் நாள், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 'தினமணி' பத்திரிகைகளில், நீலகிரியில் இலங்கை அகதிகள் வருகையையும், குடியமர்த்துவதையும், தடை செய்யக் கூறி, சட்ட சபை குழு மனுக்கள் பரசீலனை தலைவர் திரு. அன்பழகன் அவர்களிடம் கொடுக்கப்பட்ட மனுவை கண்ணுற்றோம்.

இலங்கை அகதிகளை நீலகிரியில் மாத்திரமல்ல, அரசு விரும்பினால், நாட்டின் எப்பகுதியிலும் குடியமர்த்தாமல் விட அரசுக்கு உரிமையுண்டு. எமது நோக்கம், ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திரும்பியோரைப் பற்றியதே. அவர்களை இலங்கை அகதிகளோடு சேர்த்து எண்ணாமல் இருக்க வேண்டும் என்பதே.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பிய மக்களை, நீலகிரியில் குடியமர்த்துவதை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், செய்தி வெளிவந்திருப்பின், அதற்காக நாம் மிகுந்த வேதனை அடைவதுடன், இந்திய குடியுரிமை, சட்டத்திற்கு மாறாக, சில தீய சக்திகள், வகுப்புக் கலவரத்திற்கும், நாட்டுப் பிரிவினைக்கும் அடிகோலுவதை வன்மையாக கண்டிக்கிறோம்,

இந்திய குடியுரிமை சட்டத்தின் அடிப்படையில், ஓர் இந்திய குடிமகனாக, ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் வழங்கி, இந்திய குடியரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, தாயகம் திரும்பியோர் அனைவரும், இந்த நாட்டில் வாழும் ஏனைய மக்களுக்குரிய அடிப்படை உரிமைகளோடு அனுப்பப்பட்டனர். ஆகவே, இந்த நாட்டின் பல மாநிலங்களிலும், வாழும் மக்கள், நீலகிரியில் வந்து வாழ முடியுமென்றால், தாயகம் திரும்பியோர் மட்டும் ஏன் இங்கு வாழ முடியாது?

இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சட்டம் பொதுவாகவே இருக்க வேண்டுமென்பதே எமது ஆவல். வகுப்புவாதத்தையும், நாட்டுப் பிரிவினையையும் தூண்டும் தீய சக்திகளை வளர்க்காமல், தாயகம் திரும்பியோருக்கு, நீலகிரியில் பாதுகாப்பளிக்குமாறு வேண்டுகிறோம்.

**மேற்கண்ட தீர்மானம்,** 22-3-1987ல் நடந்த மன்ற குழு கூட்டத்தில், தீர்மானிக்கப்பட்டு முதல்வர் முதல் பலருக்கு அனுப்பியுள்ளது. ○

---

## தேயிலைத் தொழிலாளிக்கு தீவைப்பு!

இலங்கை மலையகப்பகுதியில் கலஹா தேயிலை தோட்டத் தொழிற்சாலை தீவைக்கப்பட்டு சேதமடைந்தது; இதனால் பல கோடி ரூபாய் நஷ்டமடைந்தது

மார்ச் 18 யில் நடந்த இச் சம்பவமே தேயிலைத் தொழிற்சாலைக்கு தீயிடப்பட்டது முதல் சம்பவமாகும். இத்தொழிற்சாலை 1860ம் ஆண்டு அமைக்கப்பட்டதா தெரிவிக்கப்படுகிறது. ○

---

## 20 அம்சத் திட்டம் செயல்படத் துவங்கியது

பிரதம மந்திரியின் புதிய 20 அம்சத் திட்டம் ஏப்ரல் முதல் திகதியிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. புதிய 20 அம்சத்திட்டத்தில் வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் தூய்மையான குடி நீர் வழங்குதல் கல்வி நிலையை மேம்படுத்துதல். பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவை மிக முக்கிய அம்சங்களாகும்.

## கூட்டுறவு மூலம் கோழிப்பண்ணை அமைக்க முடிவு

திருச்சிமாவட்டம், லால்குடி வட்டம், எதுமலை காலனி தாயகம் திரும்பியோர் தமது சுய வேலை வாய்ப்பு - பொருளாதார நிலையை வளர்த்துக் கொள்ளும் வகையில் கோழிப் பண்ணைகளை அமைக்க உத்தேசித்துள்ளனர்.

கூட்டுறவு அடிப்படையில் இந்த பண்ணைகளை அமைக்கத்தீர்மானித்து கோழி அபிவிருத்திக்கான கூட்டுறவு சங்கமொன்றை அமைக்க உத்தேச தீர்மானம் ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளனர். ○